
# புடைவைகள் மற்றும் தைத்த ஆடைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக கையாளப்படும் தொழினுட்ப முறைகள்



Start Your Learning Journey with e-thaksalawa
The National e-learning Portal for The General Education

## 7.3 புடைவைகள் மற்றும் தைத்த ஆடைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக கையாளப்படும் தொழினுட்ப முறைகள்






### புடைவை ஆடைக் கைத்தொழில்

- உயரிய தரமுள்ள துணிவகைகள் மற்றும் ஆடைகளுக்கான நுகர்வோர் கேள்வி உயர்வாக இருத்தல்
- உயர் தரமுள்ள துணிவகைகளைப் பயன்படுத்தி தைத்த ஆடைகள், உற்பத்தி செய்வதால் அவ்வாடைகள் தரமுயர்ந்தவையாக இருத்தல்
- உயர் தரமுள்ள துணிவகைகளையும் ஆடைகளையும் உயர்வான விலைக்கு விற்பனை செய்யலாம்.

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைபொருளியியல்) - மு/பாரதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ) - மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## முற்பரிகரிப்பு செயன்முறைகள்

நெசவு செய்த பின்னர் கிடைக்கும் துணி, காரிக்கன் துணி ஆகும். சாயமிட or அச்சிட முன்னர் பொருத்தமானவாறு பரிகரிப்புச் செய்தல் வேண்டும். இச்செயன்முறையே முற்பரிகரிப்பு எனப்படும்.

### பொசுக்குதல்

- உற்பத்தி செய்த துணியின் மேற்பரப்பில் வெளித்துருத்திய நார் அந்தங்கள் காணப்படும்
- துணியின் புறத்தோற்றத்தை பாதிக்கும் எனவே அந்த நார் அந்தங்களை நீக்குதல்
- துணியை வெப்பமேற்றிய தட்டு or தீச்சுவாலை மீது செலுத்தி அந்நார் அந்தங்கள் பொசுக்கப்படும்
- நிமிடத்திற்கு 150-300 m கதி செலுத்தப்படும்
- சூடான பகுதியை தாண்டிச் செல்லும் துணிதீப்பற்றி எரிவதை தவிப்பதற்கு துணி நீர்ப்பாத்திரம் or நீராவியின் வளியே செலுத்தப்படும்

### பசை நீக்குதல்

- நெசவு செயன்முறையை தொடங்க முன் பாவு நூல்களின் உறுதியை அதிகரிப்பதற்காக சுற்றின் மீது பசை எனப்படும் ஒட்டும் தன்மையுள்ள திரவம் பூசுதல்
- துணியை நெசவு செய்து முடித்த பின்னர் தொடர்ந்து இராசயண செயன்முறைக்கு உட்படுத்த முன் நூல்களில் இடப்பட்டுள்ள பசையை நீக்குதல் வேண்டும்
- பசையை நீக்க 24 மணிநேரம் சுடுநீரில் ஊறவைத்தல் ( $35^{0}c$ - $45^{0}c$ வெப்பநிலையில்)
- விரைவாக நீக்குவதற்கு அமிலம், ஒட்சியேற்றி, நொதியம் சேர்த்தல்.

### கழுவுதல்

- துணிகளில் இயற்கையாகவே காணப்படும் பட்டைத்துண்டுகள், இலைப்பகுதிகள், தைரசன் சேர் பொருட்கள், உட்பட மேலதிகமாக சேர்க்கப்பட்ட மெழுகு ( இயல்பாகவே நாரில் காணப்படும் ) கிரிசு ( பொறிப்பகுதிகள் ஒட்டியவை ) சூடான காரக்கரைசலில் பரிகரித்து நீக்குவதே அழுத்தி தேய்த்தல் (Scouring) எனப்படும்.

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைபொருளியியல்) - மு/பராதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ) - மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வெளிற்றல்

- துணிகளில் உள்ள இயற்கையான நிறத்தை நீக்கி வெண்மையாக்கலே வெளிற்றல். சோடியம் கைபோகுளோரைட், ஐதரசன், பேரொக்சைட் போன்றன ஒட்சியேற்றியாக பயன்படும்.

## மினுக்குதல்

- மினுக்குதல் எனப்படுவது, பருத்திநார், பருத்தி துணி ஆகியவற்றின் தரத்தை மேம்படுத்துவதற்காக கையாளப்படும் செயன்முறை ஆகும்.

பருத்திநார் or பருத்தி துணியை 12% செறிவான சேடியம் ஐதரொட்சைட் கரைசலில் $21^{0}$c - $26^{0}$c இடைப்பட்ட மாற வெப்பநிலை (2-3 நிமிடம்) குறிப்பிட்டளவு நேரம் அமிழ்த்தி வைப்பதன் மூலம் மினுக்கல் செய்யப்படும்.

**பருத்தி நார்களை, துணிகளை மினுக்குவதன் அனுகூலங்கள்**

- நாரின் அல்லது துணியின் உறுதி அதிகரித்தல்
- வர்ணங்களின் பால் காட்டும் கவர்ச்சியும் தரமும் அதிகரித்தல்
- இழுபடும் தன்மை அதிகரித்தல்
- அகத்துறிஞ்சும் தன்மை அதிகரித்தல்
- மேற்புற பிரகாசம் / மெருகு அதிகரித்தல்

“பருத்திநாரை 12% வலிமையான சோடியம் ஐதொரொக்சைட் கரைசலில் அமிழ்த்தி வைப்பதால் அந்நார்களால் அக்கரைசல் உறிஞ்சப்படும். நார்கள் உருளை வடிவத்தை பெற்று அளவில் பெரிதாகும். இதன் காரணமாக துணியின் நீளமும், அகலமும் குறைவடையும்.”


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## சௌகரியமாக்கற் பரிகரிப்பு

- துணிகளிலும் தைத்த ஆடைகளிலும் மேற்பரப்பில் காணப்படும் சொரசொரப்பான தன்மையை குறைப்பதற்காகவும் நெகிழ்ச்சித் தன்மையை ஏற்படுத்துவதற்காககவும் செய்யப்படும். ஒரு பரிகரிப்பே இதுவாகும்.

" சாயமூட்டும் துணிகளில் சாயமூட்டும் போது இது செய்யப்படும்."

## விசேட சர்ந்தர்ப்பங்களில் செய்யப்படும் நேர்த்தியாக்கல்கள்

### நீர் புகா நேர்த்தியாக்கல் (Water proofing)

- துணிகளில் காணப்படும் துவாரங்கள் மூடப்படும் வரை பொருட்கள் பூசப்படும். பூசப்படும் மறைபொருள் காரணமாக நீர் பரப்பி செல்லமாட்டாது.
- கரையாத்தன்மையுள்ள உலோகச் சேர்வைகள், குப்பிரமேனியம், பரவின் மெழுகு or வேறு மெழுகு வகை, ஆழிவித்தெண்ணெய் பயன்படுத்தப்படும்.
- நுண்துளைகள் இன்மையால் இத் துணியிலான ஆடைகளை அணிவது அசௌகரியம்

E.g: மழைமேலங்கி

குடைத்துணி

### தீயெதிர்ப்பு நேர்த்தி (Fire proof Finishing)

- இவ்வகைத் துணிகள் தீயுடன் தொடர்புபடுவதால் தீப்பற்றமாட்டாது.
- செலிசோசு அடங்கிய நார்களால் உற்பத்தி செய்த துணிகளை தீயெதிர்ப்பு நேர்த்திக்கு உட்படுத்தலாம்.
- இவ்வாறான துணிகளில் இரசாயணப் பொருட்கள் சேர்ப்பதால் தீயெதிர்ப்புத் தன்மையை ஏற்படுத்தலாம்

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைபொருளியியல்) - மு/பராதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ) - மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**பற்றீரியா எதிர்ப்பு நேர்த்தி (Anti bacterial Finishing)**

- நனோ தொழினுட்பத்தைப் பயன்படுத்தி துணியிற்கு நேர்த்திப்பூச்சு (Sliver Coating) பூசி நேர்த்தியாக்குவதாகும்.
- உடலின் மீது பற்றீரியா வளர்வதை இவ்வகை துணி தடை செய்யும்..

E.g: காயங்கள் , புண்கள் மீது வைக்கப்படும் வெள்ளி நிற நுண்முகில் துண்டு

**சுருங்காமற் செய்தல் (Sanforizing)**

துணியைப் பயன்படுத்தும் போதும் சலவை செய்யும் போதும் சுருங்கமேற்படுவதைத் தவிப்பதற்காக செய்யப்படும் ஒரு பொறிமுறையாகும்.

**வெளிற்றுதல் (Bleaching)**

கடுமையான துணியினால் தைத்த ஆடைகளை ஐதரசன் பேரொக்சைட்டில் இட்டு கடும் நிறத்தை நீக்கி வெண்மையை அதிகரித்தலாகும்.

**அரத்தாளினால் தேய்த்தல் (Sand papering)**

தைத்த ஆடையில் தெரிவு செய்த மேற்பரப்பின் நிறத்தை நீக்குவதற்காக அரத்தாளினால் தேய்த்தல்

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைபொருளியியல்) - மு/பாரதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ) - மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

### நிற நீக்கல் (Decolourizing) பேமங்கனேற்று சிவிறல் (Spray)

தைத்த ஆடை மீது பேமங்கனேற்று சிவிறுவதால் ஆடையின் வெவ்வேறு இடங்களின் நிறச் செறிவு வேறுபட்டு காணப்படும்

### மணலிடல் (Sanding)

- தைத்த ஆடை மீது பொறியொன்றினால் மணல் தாரை விசிறப்படும்.
- ஆடையின் மேற்பகுதி மீது அதிகளவு மணலும் கீழ்ப்பகுதி மீது குறைவான அளவு மணலும் விசிறுவதால் வெவ்வேறு அலங்கார வடிவமைப்புக்கள் உருவாகும்.(Design)
- வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு அளவு மணல் விசிறுவதால் வெவ்வேறு வடிவம் பெறலாம்.

### நொதியச் சலவை (Enzyme wash)

- நொதியத்தில் ஆடையை இட்டு வைத்து பின்னர் சலவை செய்யப்படும்.
- துணி மென்மையடையும்
- துணி உறுதி குறைவடையும்
- காற்கட்டை துணி போன்றவற்றிற்கு நொதியம் இட்டு பின்னர் சலவை செய்யப்படும்.
- நொதியத்தில் இட்டு வைப்பதால் துணியின் நிறம் சற்றுக்குறைவடைய இடமுண்டு

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைபொருளியியல்) - மு/பாரதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ) - மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



# தனியாளின் பாதுகாப்பிற்காக பயன்படுத்தப்படுகின்ற துணிவகைகளும் நேர்த்திகளும்

### குண்டு துளைக்காத நேர்த்தி ( Bullet Proof )

- செயற்கை நார்களைப் பயன்படுத்தி இவ்வகைத்துணி உற்பத்தி செய்யப்படும்.
- நூல்கள் மிக அருகருகே அமையுமாறு நெசவு செய்யப்படும்.
- ஒன்றன் மீது ஒன்றாக சில படைகளாக துணிப்படைகளை இட்டு குண்டு துளைக்காத ஆடைகள் தயாரிக்கப்படும்.
- இத் துணிகள் மீது இராசயணப் பொருட்கள் பூசுவதால் உறுதியை மேலும் அதிகரிக்கும்.

### இராசயணப் பொருட்களை சகிக்கும் நேர்த்தி ( Chemical Resistant )

- இவ்வகை நேர்த்தியினால் துணியினூடாக திரவநிலை or வாயு நிலையில் இராசயண பொருட்கள் புகமாட்டாது.
- இவ்வகை நேர்த்தி செய்யப்பட்ட துணிகள் உடலுடன் தொடுகையுற மாட்டாது.

### கதிர்ப்பை சகிக்கும் நேர்த்தி ( Chemical Resistant )

- உடலுக்கு பாதகமான கதிர்ப்புக்கள் துணியின் ஊடாக செல்வதை தவிர்ப்பதற்காக மெல்லிய ஏவப்பட்ட காபன் இடல் படையொன்று (Active carbon coating) கதிர்ப்பை சகிக்கும் நேர்த்தி யாக்கல் எனப்படும்.
- யுத்த களத்தில் முன்னிலையிலுள்ள போர் வீரர்கள் இவ்வகை நேர்த்திக்கு உட்படுத்திய ஆடைகளை அணிந்திருப்பார்கள்

தொகுப்பு : திரு செல்வரட்ணம் பாஸ்கரன் , ஆசிரியர் (மனைபொருளியியல்) - மு/பராதி.ம.வித்தியாலயம்
திருமதி தி. பிரசாளினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / ஜெயபுரம்.ம.வித்தியாலயம்
செல்வி. ஆ. சுதாசினி , ஆசிரியர் (மனைபொருளியியல்) - கி / முழங்காவில் ம.வித்தியாலயம்
கணினி வடிவமைப்பு : திருமதி.கே.மேகலா, ஆசிரியர் (த.தொ.தொ) - மு/உடையார்கட்டு மகா வித்தியாலயம்
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk